பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 26 வியாழக்கிழமை 10.03.2022 கதிர் 351

## கச்சதீவு திருவிழாவில் பங்கேற்க நூறு இந்தியர்களுக்கு அனுமதி!

(ந.லோகதயாளன்)

கச்சதீவில் நாளையும், நாளைமறுதினமும் நடைபெறவுள்ள புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழாவில் தமிழகத்தில் இருந்து 100 பக்தர்கள் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை இராமேஸ்வரம் வேர்க்கொட்டு பங்குத்தந்தை தேவசகாயம் ☞2

# யாழில் ஆட்டத்தை ஆரம்பித்தார் கீதநாத்!





### ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களை உடனடியாகக் கூட்டுமாறு மாவட்ட அரச அதிபருக்குப் பிரதமர் அலுவலகத்திலிருந்து கடிதம்

யாழ்ப்பாணம் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை உடனடியாகக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்டச் செயலர் க.மகேசனுக்கு, பிரதமர் அலுவலகத்திலிருந்து நேற்றுக் கடிதம் அவசர அவசரமாக அனுப்பப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவுக்கு பிரதமர் அலுவலகப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள கீதநாத் காசிலிங்கத்தின் ஒப்பத்துடன் இந்தக் கடிதம் அனுப்பி ☞2

# பயங்கரவாதச் சட்டத்தை முற்று முழுதாக நீக்குக!

### ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டை எழுத்து மூலம் சுமந்திரனிடம் இன்று கையளித்த எதிர்க்கட்சித் தலைவர்

**பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்று முழுதாக நீக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.**

**இது தொடர்பில் தமது தமது கட்சியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் எழுத்துமூல ஆவணத்தை எதிர்க்கட்சித் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனிடம் இன்று நேரில் கையளித்தார்.** ☞2



## சாப்பாட்டால் சபையில் சண்டை ஏற்படவில்லை

### ஆளுங்கட்சி தெரிவிப்பு



நாடாளுமன்ற சிற்றுண்டிச் சாலையில் திரவப்பால் கோரி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேயாட்டம் ஆடினர் என பத்திரிகைகளிலும், இணைய ஊடகங்களிலும் செய்திகள் ☞2

## காணி சுவீகரிப்பு தொடர்பான கடிதங்களை வாபஸ் பெறுக!



### நில அளவை திணைக்களத்துக்கு வலிகாமம் வடக்கு தவிசாளர் கடிதம்

யாழ்ப்பாணம், கீரிமலையில் ஜனாதிபதி மாளிகைக்கு உட்படாத பகுதிகளில் உள்ள காணிகளை உடனடியாக மக்களிடம் கையளிக்க வேண்டும் எனவும், காணி உரிமையாளர்களுக்கு காணி சுவீகரிப்பு தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதங்களை வாபஸ் பெற வேண்டும் எனவும் வலியுறுத்தி நில ☞2

## கோட்டா - சம்பந்தன் 15ஆம் திகதி பேச்சு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ☞2

## நிதி அமைச்சரைச் சபைக்கு வருமாறு ஆணையிடுங்கள்

### சபாநாயகரிடம் எதிரணி வேண்டுகோள்

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சபைக்கு வருவது இல்லை. அவர்தான் நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும். ஆனால், அவருக்குப் பதிலாக வேறு உறுப்பினர்கள் பதில் கூறி வருகின்றனர். நிதி அமைச்சரைச் சபைக்கு வரச்சொல்லுங்கள். இல்லையென்றால் சபாநாயகர் நிதி அமைச்சருக்குக் ☞2

## லொஹானுக்குப் புதிய அமைச்சுப் பதவி



களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், படகுகள் மற்றும் கப்பற்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக லொஹான் ரத்வத்த நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று அவர் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் ☞2

## கரைதுறைப்பற்று பிரதேச சபை அமர்வுக்கு மாட்டுவண்டிகளில் புறப்பட்ட உறுப்பினர்கள்

எரிபொருள் பற்றிக்குறையைக் கண்டித்து முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்கள் மாதாந்த சபை அமர்வுக்கு இன்று மாட்டுவண்டிகளில் சென்றனர்.

முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தில் முன்றலில் இருந்து இவ்வாறு சபை உறுப்பினர்கள் மூன்று மாட்டுவண்டிகளில் சபை அமர்வுக்குப் புறப்பட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் க.விஜிந்தன், உப தவிசாளர் ம.தொம்மைப்பிள்ளை, உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன், ☞2





## காணி சுவீகரிப்பு தொடர்பான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவைத் திணைக்களத்துக்குக் கடிதம் அனுப்பியுள்ளேன்.

- இவ்வாறு வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வலிகாமம் வடக்கில் நகுலேஸ்வரம் ஜே/226 கிராமசேவையாளர் பிரிவில் மக்களுடைய காணிகளை சுவீகரிக்க நடவடிக்கை இடம்பெற்றபோது மக்கள் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு அது நிறுத்தப்பட்டது.

இந்தநிலைமையில் 2019ஆம் ஆண்டு அப்போதைய வடக்கு மாகாண ஆளுநராக இருந்த சுரேன் ராகவன் காணிகளை விடுவிப்பதாக எழுத்து மூலம் தெரிவித்திருந்தும் இன்றுவரை அந்தக் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தேவைக்காக அளவீடு செய்ய முயற்சித்தபோது மீண்டும் மக்களால் போராட்டங்கள் செய்யப்பட்டு நிறுத்தப்பட்டு இருந்தது.

இந்நிலையில், விடுவிக்கப்படுவதாகக் கூறப்பட்ட மக்களின் நிலங்களும் நில அளவைத் திணைக்களத்தால் சுவீகரிக்கப்படுவதாக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ள நிலையில் மக்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்த இடங்களில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஆலயங்கள் உட்பட மயானங்கள் போன்ற முக்கிய இடங்கள் உள்ள நிலையில் இவ்வாறு உதாசீனமாக மேற்கொள்ளப்படும் நில அளவைத் திணைக்களத்தின் செயற்பாடுகள் உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும் என மக்கள் என்னிடம் வலியுறுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி மாளிகைக்கு உட்படாத பகுதி காணிகளை உடனடியாக மக்களிடம் கையளிக்க வேண்டும் எனவும், சம்பந்தப்படாத பொதுமக்களுக்கு காணி சுவீகரிப்பு தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதங்களை வாபஸ் பெற வேண்டும் எனவும் வலியுறுத்தி நில அளவைத் திணைக்களத்துக்குக் கடிதம் அனுப்பியுள்ளேன் - என்றார்.

## லொஹானுக்குப் புதிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துகொண்டார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னதாக குறித்த பதவியை வகித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர அண்மையில் விலகியிருந்தார்.

இதையடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்துக்கு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த நியமிக்கப்பட்டுள்ளார்.

## நிதி அமைச்சரைச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டளை அனுப்புங்கள்.

- இவ்வாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம், எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணியளவில் கூடியது. இதன்போது ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பிய லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி.,

நிதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே இருக்கின்றது. டிசம்பர் 10ஆம் திகதியே நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சபையில் உரையாற்றினார். அதன்பின்னர் நாட்டின் நிதி நிலைவரம் தொடர்பில் கடந்த மூன்று மாதங்களாக நிதி அமைச்சர் நாடாளுமன்றத்துக்குத் தெளிவுபடுத்தவில்லை.

எனவே, நாடாளுமன்றம் வந்து தெளிவுபடுத்துமாறு, நிதி அமைச்சருக்கு சபாநாயகர் உத்தரவிடவேண்டும் - என்றார்.

## கரைதுறைப்பற்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தி.இரவீந்திரன், இ.கவாஸ்கர், க.தவராசா, இ.கஜீதரன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினரான இ.ஜெகதீசன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்களான த.அமலன், மோ.விக்கினா ஆகியோர் இவ்வாறு மாட்டுவண்டிகளில் சபை அமர்வுக்குச் சென்றனர்.

## சாப்பாட்டால் சபையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியாகியுள்ளன. அவ்வாறானதொரு சம்பவம் நடைபெறவில்லை. இப்படியான சம்பவத்தால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயருக்குக் களங்கம் ஏற்படுகின்றது. எனவே. இது தொடர்பில் விசாரணை நடத்தி, போலித் தகவல்களைப் பரப்பியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போதே சிறப்புரிமை பிரச்சினையொன்றை எழுப்பி மேற்படி கோரிக்கையை ஜயந்த கெட்டகொட எம்.பி. முன்வைத்தார்.

நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையை மூடினால், எங்களுக்கு வீட்டில் இருந்து உணவு எடுத்து வந்து சாப்பிடலாம் என்ற யோசனையையும் அவர் முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர்,

தவறான செய்தி வெளியானதையிட்டு கவலை அடைகின்றேன். ஊடக சுதந்திரம் தவறாகப் பயன்படுத்தப்படக்கூடாது. இப்பிரச்சினை சிறப்புரிமைக்குழுவுக்கு வழங்கப்படும் - என்றார்.

## கோட்டா - சம்பந்தன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறவுள்ளது.

இந்தத் தகவலைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உறுதிப்படுத்தினார்.

ஜனாதிபதிக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு குறித்து பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவிப்புகள் வெளியாகி இருந்தபோதும், அவை நடைபெற்றிருக்கவில்லை.

இந்நிலையில், ஜனாதிபதி செயலகத்தால் இந்தச் சந்திப்பு குறித்த அறிவித்தல் நேற்று கூட்டமைப்பின் தலைமைக்கு வழங்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது அமைச்சர் சமல் ராஜபக்ஷவும் கலந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கில் இடம்பெறுகின்ற காணி சுவீகரிப்புகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அண்மையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாதச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயம் தொடர்பில் சுமந்திரன் எம்.பி. ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் நாம் கையெழுத்து வேட்டையை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்த நடவடிக்கைக்கு மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், கல்வியலாளர்கள், அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள், மாணவர்கள் மற்றும் மூவின மக்கள் தங்கள் ஆதரவை வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்று முழுதாக நீக்கப்பட்டு, சர்வதேச நியமங்களுக்கு ஏற்புடைய சட்டமொன்று அதனைப் பிரதியீடு செய்ய வேண்டுமென்ற தமது கட்சியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் எழுத்துமூல ஆவணத்தை எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, இன்று காலை என்னிடம் கையளித்தார்.

நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் வைத்து இந்த ஆவணத்தை அவர் என்னிடம் கையளித்தார்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், வேலுசாமி இராதாகிருஷ்ணன், பழனி திகாம்பரம், மயில்வாகனம் உதயகுமார் மற்றும் புத்திக பத்திரண ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர் - என்றார்.

## யாழில் ஆட்டத்தை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டுள்ளது.

அதில், 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத்திட்டத்தின் பிரகாரமும் 2022ஆம் ஆண்டுக்கான அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்தி உச்ச பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காகவும் 2022ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்களின் அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை கிரமமாக நடத்துவதற்கான முக்கியத்துவத்தின் பால் தங்களின் மேலான கவனத்தை ஈர்க்கின்றேன்.

அதன் அடிப்படையில் 2022ஆம் ஆண்டிற்கான நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வேலைத்திட்டங்களுக்;கு ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதி பெறுவதற்காக பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கு ஆவன செய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

## கச்சதீவு திருவிழாவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இராமேஸ்வரத்திலிருந்து பக்தர்கள் வருவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இந்தத் தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, இது தொடர்பான மேலதிக தகவல் எதுவும் கிடைக்கவில்லை எனப் பதிலளித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## நீதியில்லா நிதி அமைச்சர்

நாட்டின் மோசமடைந்திருக்கும் பொருளாதார நிலைமை குறித்து ஒரு முக்கிய விடயத்தை இன்று நாடாளுமன்றில் சுட்டிக் காட்டியிருக்கின்றது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி.

அதன் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் குறிப்பிட்ட இந்த விடயம் இன்றைய நிலையில் மிகவும் முக்கியமானது.

யார், எதை, எப்படிக் கூறினாலும், நாட்டில் நிதி நிர்வாகத்துக்கு நாடாளுமன்றமே பொறுப்பு. நிதி அமைச்சை ஜனாதிபதி தாமே வைத்திருந்தாலும் அல்லது வேறு ஓர் எம்.பி. அந்தப் பொறுப்பைக் கொண்டிருந்தாலும், நிதி அமைச்சர் என்ற முறையில் நாடாளுமன்றுக்கே அவர் பொறுப்புக் கூற வேண்டியவர்.

நிதி அமைச்சர் என்ற முறையில் தம்முடைய தீர்மானங்கள், நடவடிக்கைகள், கொள்கை முடிவுகள் போன்றவற்றை அவர் அமைச்சரவையின் அனுமதியைப் பெறாமல் கூட, நாடாளுமன்றத்தின் இறுதி அங்கீகாரத்தை அவர் பெற்றாகவேண்டும். நாடாளுமன்றத்தின் நம்பிக்கைக்கும் தழுவு அங்கீகாரத்தைப் பெறுவதற்கான வாய்ப்பையும் உடையவர் என்ற கோதாவில்தான் நிதி அமைச்சர் பொறுப்பின் கடமைகளை அவர் ஆற்றி வருகின்றார் என்பது மறுக்க முடியாத உண்மை.

அப்படிப்பட்ட நிதி அமைச்சர் நாடாளுமன்றுக்கு வருகின்றார் இல்லை என்றும், நிதித்துறை சம்பந்தமான பிரச்சினைகளுக்கு அவர் பதில் தராமல் வேறு உறுப்பினர்களே பதிலளிக்கின்றார்கள் என்றும் சுட்டிக் காட்டியுள்ள எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா, ஆகையால் நிதி அமைச்சரை சபைக்கு வரச் சொல்லுங்கள் அல்லது அவரை நாடாளுமன்றுக்கு சமுகமளித்து உரிய விளக்கங்களைக் கொடுக்கும்படி சபாநாயகர் அவருக்குக் கட்டளை பிறப்பிக்க வேண்டும் என்று கோரியிருக்கின்றார்.

டிசெம்பர் 10 ஆம் திகதியே நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் கடைசியாக உரையாற்றினார். அதன் பின்னர் நாட்டின் நிதி நிலைவரம் தொடர்பாக கடந்த மூன்று மாதங்களாக அவர் நாடாளுமன்றுக்குத் தெளிவுபடுத்தவேயில்லை என்றும் கிரியெல்ல சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

நாட்டின் பொருளாதார நிலைமை எத்தகைய மோசமான கட்டத்தில் இருக்கின்றது என்பது நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் நன்கு தெரியும்.

ஏறத்தாழ அன்றாடம் காய்ச்சி நிலைமைக்கு நாடு வந்து விட்டது. இன்று ஏதேனும் நாட்டிடம் இருந்து புதிய கடன் வசதி அல்லது நிதி உதவி கிடைத்தால்தான் நாளைய கடன் தவணைப் பணத்தைத் திரும்பச் செலுத்தலாம், இறக்குவதற்கு துறைமுகத்தில் காத்துக் கிடக்கும் எரிபொருள் கப்பலுக்கோ உணவு, மருந்து போன்ற அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்களுக்கோ உரிய கொடுப்பனவை வழங்கலாம் என்ற நிலைமை.

கட்டு மட்டில்லாமல் எகிறும் விலைவாசி, கிடைக்காமல் தட்டுப்பாடாகிப் போகும் பல அத்தியாவசியப் பொருள்களுக்கான கியூக்கள், மின்வெட்டு அவதி என்று இன்னோரன்ன மக்கள் பிரச்சினைகள் குறித்து உடனுக்குடன் பேசவும், ஆராயவும், தீர்வு காணவும், உரிய பதில் தரவும் பொறுப்பான தளம் நாடாளுமன்றம்தான். பதில் தரவேண்டிய கடப்பாடுடையவர்களில் முக்கியமானவர் நிதி அமைச்சர்.

நாடாளுமன்றுக்கு முகம் கொடுக்க முடியாத நிதியமைச்சர், நாட்டின் பொருளாதாரத்தை நெருக்கடியிலிருந்து மீட்பார் என்பது ‘கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவேன் என்றானாம்’ – என்ற கதையை ஒத்ததுதான்.

# தமிழக வடக்கு மீனவர் பிரச்சினையை தீர்க்க வெளிவிவகார அமைச்சர் தலையிடல் வேண்டும்!

## கடற்றொழில் அமைச்சருக்கு திறமையில்லை என்று வலியுறுத்துகிறார் சாணக்கியன் எம்.பி.



தற்போதைய கடற்தொழில் அமைச்சரின் சில அணுகுமுறைகள் காரணமாக தமிழக வடக்கு மீனவர்களுக்கு இடையிலான பிரச்சினைகள் அதிகரித்து செல்கின்றமையால் இந்த விடயத்தை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கையாள வேண்டுமென தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்தினார்.

தமிழக வடக்கு மீனவர்களின் பிரச்சினைகளை சுமுகமாக கையாளக்கூடிய அளவிற்கு தற்போதுள்ள கடற்தொழில் அமைச்சரிடம் திறமை இல்லை எனவும் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சட்டமூல இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனை வலியுறுத்தினார்.

அவர் மேலும் கூறுகையில் –

இந்திய மீனவர்களின் இழுவை மடிப்படகு மீன்பிடியால் வடக்கு, கிழக்கு மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தவிடயம் தொடர்பாக தொடர்ச்சியாக நாடாளுமன்றத்தில் கதைத்த போது, இந்திய பிரதமருடன் நாங்கள் கதைக்கின்றோம், பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்கின்றோம் என பல தடவைகள் கடற்தொழில் அமைச்சர் இங்கு வாக்குறுதி வழங்கியிருந்தபோதும் அதற்கான எந்த முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை.

இந்திய மீனவர்களின் இழுவை மடிப்படகு மீன்பிடி பிரச்சினையில் எமது மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

தற்போதைய கடற்தொழில் அமைச்சரின் செயற்பாடுகள் காரணமாக சில பிரச்சினைகள் அங்கு உருவாகின்றன. இவரின் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஆகவே, இந்த விடயத்தை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கையாளவேண்டும். முன்பு கடற்தொழில் அமைச்சராக மஹிந்த அமரவீர இருந்தபோதும் இப்படியான பிரச்சினைகள் வந்தன. எனினும் அவர் சரியான முறையில் கடற்படையுடன் அணுகி அந்தப்பிரச்சினைகளை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தியிருந்தார். எமது மீனவர்கள் மீன்பிடிக்கும் வழிவகைகளை ஏற்படுத்திக்கொடுத்திருந்தார்.

ஆனால் தற்போதுள்ள கடற்தொழில் அமைச்சரிடம் அந்தத் திறமை இல்லை. மீனவர்கள் எதிராக கதைத்தால் அந்த நிர்வாகத்தை மாற்றுகின்றார். கடற்தொழில் அமைச்சர் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கக்கூடிய நிலைமையில் இல்லை.

எனவே தான் இந்தப்பிரச்சினையை வெளிவிவகார அமைச்சர் கையள வேண்டுமெனக் கோருகின்றேன். கடற்தொழில் அமைச்சரின் அணுகுமுறை காரணமாகத்தான் வடக்கு மீனவர்களின் பிரச்சினை மேலும் மேலும் அதிகரித்து செல்கின்றது.

# 1,300 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை பெற்றோலிய தாபனத்துக்கு வழங்கப்படவில்லை

## மின்சாரசபை உள்ளிட்ட 7 நிறுவனங்களால்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், இலங்கை மின்சார சபை உள்ளிட்ட ஏழு நிறுவனங்கள் எரிபொருளுக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 1,300 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை செலுத்தத் தவறியுள்ளன.

நாடாளுமன்றத்தில் பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழுவின் (கோப்) அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் திணைக்களம், இலங்கை இராணுவம், விமானப்படை மற்றும் பொலிஸ் ஆகியனவும் பணம் செலுத்தத் தவறியுள்ளன எனவும் குறிப்பிடப்படுகின்றது.

குறிப்பாக மின்சார சபை 730 கோடி ரூபாவையும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 560 கோடி ரூபாவையும் செலுத்தத் தவறியுள்ளன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்

# எரிபொருள், எரிவாயு நெருக்கடி மரக்கறி வர்த்தகத்திலும் வீழ்ச்சி!

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் மற்றும் எரிவாயு நெருக்கடி காரணமாக மரக்கறி வர்த்தகம் 40 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்களின் சங்கத் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் டீசல் தட்டுப்பாடு காரணமாக வாகன சாரதிகள் தோட்டங்களுக்கு சென்று காய்கறிகளைக் கொள்வனவு செய்யவோ அல்லது சந்தைக்குக் கொண்டு வரவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், எரிவாயு தட்டுப்பாடு காரணமாக உணவகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளமையால், சந்தைக்கு காய்கறிகள் வாங்க வரும் தொழில் முனைவோர் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# நாடாளுமன்றத்திலும் மின்பாவனை மட்டுப்பாடு

நாடாளுமன்றத்திலும் மின்சார பாவனை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற அமர்வை நேற்று (புதன்கிழமை) ஆரம்பித்து வைத்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதற்கு அனைவரும் முழுமையாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதன்போது கோரிக்கை விடுத்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
வியாழக்கிழமை 10.03.2022

# பிரதமர் இம்ரான் கான் அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா பிரேரணை



பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்துள்ளன.

இதற்காக பாகிஸ்தான் முஸ்லிம் லீக், பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 100 எம்.பிக்கள் கையொப்பமிட்ட பிரேரணை நாடாளு மன்ற செயலரிடம் நேற்று கையளிக்கப்பட்டதாக முஸ்லிம் லீக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் மரியம் ஔரங்கசீப் தெரிவித்தார்.

பாகிஸ்தான் சட்டப்படி குறைந்தது 68 எம்.பி.க்கள் கையொப்பமிட்ட பிரேரணை கையளிக்கப்பட்டதால் அது குறித்து மூன்று முதல் ஏழு நாள்களுக்குள் நாடாளு மன்றத்தைக் கூட்டி வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

இதேவேளை, 156 எம்.பிக்களைக் கொண்ட இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக் இன்சாப் கட்சி, 5 கட்சிகளின் கூட்டணியுடன் 177 எம்.பிக்களின் பலத்துடன் ஆட்சியில் உள்ளது.

எதிர்க்கட்சிகளுடன் 162 எம்.பிக்கள் உள்ளனர். மொத்தம் 342 எம்.பிக்களைக் கொண்ட பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில், பிரதமரையும் அவரது அமைச் சரவையும் நீக்க நம்பிக்கை வாக்கெடுப்பில் 172 வாக்குகளை எதிர்க்கட்சிகள் பெற வேண்டும்.

2018 முதல் கூட்டணி ஆட்சியை நடத்தி வரும் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக கூட்டணி கட்சியி னரே எதிர்த்து வாக்களித்தால் தான் ஆட்சி கவிழும் நிலை ஏற்படும்.

இந்நிலையில் தனது அரசு கவிழும் வாய்ப்பே இல்லை என பிரதமர் இம்ரான் கான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளுக்கு மக்கள் ஆதரவு இல்லை. 2028 வரையிலும் எனது ஆட்சிக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. எதிர்க்கட்சிகளுக்கு அவமானகரமான தோல்வி ஏற்படும் எனவும் அவர் கூறினார்.

நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எனது கட்சி எம்.பிக்களுக்கு 18 கோடி ரூபா பேரம் பேசப்படுகிறது. அந்த பணத்தைப் பெற்று ஏழைகளுக்கு வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளேன். நான் உயிருடன் இருக்கும் வரையில் எனது ஆட்சியை கவிழ்க்க முடியாது எனவும் இம்ரான் கான் குறிப்பிட்டார்.

ஆனால் இம்ரான் கானை பதவி நீக்கம் செய்ய தேவையான எம்.பி.க்களின் பலம் உள்ளதாக எதிர்க் கட்சிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

இதற்கிடையே எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா பிரேரணையை முன் வைத்துள்ள நிலையில் இது குறித்து சட்டமா அதிபருடன் இம்ரான் கான் ஆலோ சனை நடத்தினார்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற நாடாளு மன்ற மேலவை தேர்தலில் ஆளும் அரசுக்குப் பின்ன டைவு ஏற்பட்டது. இதையடுத்து, பிரதமர் இம்ரான் கான் தானாகவே நம்பிக்கை வாக்கெடுப்பை கோரினார். அதில் 178 வாக்குகளைப் பெற்று அவர் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.



## நாட்டுக்காக உயிர் நீத்த உக்ரைன் நடிகர் பாஷா லீ

ரஷ்யாவுக்கு எதிரான தாக்குதலில் தாய்நாட்டை பாதுகாக்க களமிறங்கிய உக்ரைன் தொலைக்காட்சி தொகுப்பாளரும், நடிக ருமான பாஷா லீ ரஷ்யப் படைகள் தாக்குதலில் வீர மரணம் அடைந்தார் உக்ரைன் தலைநகர் கீவ் உள்ளிட்ட பகுதிகளில் ரஷ்யப் படைகள் வான்வழித் தாக்குதலுக்கான சைரன் எச்சரிக்கை ஒலிக்க விட்டுள்ளதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், ரஷ்யாவுக்கு எதிரான தாக்குதலில் உக்ரைனின் ராணுவத்தில் இணைந்து போராடிய உக்ரைன் நடிகர் பாஷா லீ (33), கீவ் பகுதியில் நடந்த வெடிகுண்டு தாக்குதலில் வீர மரணம் அடைந்துள்ளார்.

33 வயதில் தாய்நாட்டை பாதுகாக்க ரஷியாவிற்கு எதிரான போரில் களமிறங்கி போராடி வீர மரணம் அடைந்த நடிகர் பாஷா லீக்கு சக நடிகர்கள், ரசிகர்கள் இணையத்தில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அனைவராலும் நன்கு அறியப்பட்ட தொலைக்காட்சி தொகுப்பாளர், பாடகர், இசையமைப்பாளர் மற்றும் நடிகர் என பன்முகம் கொண்ட துடிப்பான இளைஞர் பாஷா லீயை தேசம் இழந்துள்ளதாக பெரும்பாலான ரசிகர்கள் தங்களது அஞ்சலியில் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, உக்ரைன் தலைநகர் கீவ்வில் ரஷ்யப் படைகள் தாக்கக்கூடும். எனவே, மக்கள் பாதுகாப்பாக நிலவறைக்குள் சென்று பதுங்கிக்கொள்ளுமாறு உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 24 ஆம் திகதி ரஷ்ய அதிபர் புடின் உக்ரைன் மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டதில் இருந்து இதுவரை உக்ரைனில் பொதுமக்கள் 406 பேர் பலியாகி உள்ளனர் எனவும், ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு வரை 801 பேர் காயமடைந்துள்ளனர் என்று ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகம் தெரிவித்துள்ளது.



## பேச்சில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக ரஷ்யா தகவல்

உக்ரைனில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சில், சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என ரஷ்யா தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதுகுறித்து ரஷ்ய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் மரியா ஸகாரோவா கூறுகையில், 'பொதுமக்களை பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச் செல்வதற்கு பாதுகாப்பு வழித்தடம் அமைப்பது குறித்து உக்ரைன் பிரதி நிதிகளுடன் மேலும் ஒரு சுற்று பேச்சு நடை பெறும்.

உக்ரைனின் தற்போதைய அரசைக் கவிழ்க் கும் நோக்கில் அங்கு இராணுவ நடவடிக்கை மே ற்கொள்ளப்படவில்லை.

இந்தப் போர் உக்ரைனின் இறையாண் மைக்கோ, அந்த நாட்டு மக்களுக்கோ எதிரானது அல்ல என்பதை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறோம் என கூறினார்.

கடந்த மாதம் 24ஆம் திகதி உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையை அறிவித்தபோது, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் இதே கருத்தை தெரிவித்திருந்தார். உக்ரைனை 'நாஜிக்களின் பிடியிலிருந்து' விடுவிப்பதற்காகவே அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அப்போது அவர் விளக்கம் அளித்திருந்தார்.

## ரஷ்யாவை பயங்கரவாத நாடாக அறிவிக்குமாறு உக்ரைன் அதிபர் கோரிக்கை



ரஷ்யாவை பயங்கரவாத நாடாக அறிவிக்கு மாறு உக்ரைன் அதிபர் வலியுறுத்தியுள்ளார்.

இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் காணொலி ஊடாக உரையாற்றிய உக்ரைன் அதிபர் ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதார தடைகளின் அழுத்தத்தை அதிகரித்து அந்நாட்டை பயங்கர வாத நாடாக அறிவிக்க வேண்டும் எனவும், உக்ரைனிய மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

ரஷ்ய படைகளை ஆகாயம், கடல், தரை என மூன்று வழிகளிலும் உக்ரைன் இராணுவம் எதிர் கொண்டு வருவதாக கூறிய ஜெலென்ஸ்கி, தங்கள் வான்பரப்பை விமானங்கள் பறக்க தடை செய்யப்பட்ட பகுதி என அறிவித்து, உக்ரைன் வான்பரப்பு பாதுகாப்பானது என்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

உக்ரைன் அதிபரின் உரையை பாராட்டிய இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சன், உக்ரை னுக்கு ஆயுத உதவிகள் உட்பட அனைத்து உதவி களும் வழங்கப்படும் என உறுதியளித்தார்

# 30 வருடங்களாக சிறையிலிருந்த பேரறிவாளனுக்கு இந்திய உச்சநீதிமன்றம் பிணை வழங்கியது



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைவாசம் அனுபவித்துவரும் பேரறிவாளன், கடந்த மே மாத இறுதியில் ஒரு மாத சிறை விடுப்பில் மருத்துவ சிகிச்சைகளைப் பெறுவதற்காக வெளியே வந்திருந்தார். இதன் பின்னர் ஒவ்வொரு மாதமும் அவருக்கு பரோல் நீடிப்பு செய்யப்பட்டு வந்தது. பத்தாவது முறையாக கடந்த மாதமும் பரோல் நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.

ராஜீவ் கொலை வழக்கில் 1991 ஆம் ஆண்டு ஜுன் 11ஆம் திகதி இரவு கைது செய்யப்பட்ட பேரறிவாளன், சுமார் 26 ஆண்டுகள் கழித்து கடந்த 2017 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 24 ஆம் திகதியன்று, முதல் முறையாக ஒரு மாத பரோல் விடுப்பில் ஜோலார்பேட்டையில் உள்ள தனது வீட்டிற்கு சென்றிருந்தார். அதற்குப் பின்னர் அவருக்கு பத்துக்கும் மேற்பட்ட முறை பரோல் கொடுக்கப்பட்டது. இவ்வாறான நிலையில், தற்போது பேரறிவாளனுக்கு 30 ஆண்டுகளுக்குப் பின்னர் உச்சநீதிமன்றம் முதல் தடவையாகப் பிணை வழங்கியது.

தனக்கு விடுதலை அளிக்கக்கோரி பேரறிவாளன் தரப்பில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின்போது, அவருக்குப் பிணை வழங்கும் உத்தரவினை உச்சநீதிமன்றம் வழங்கியது.

வழக்கு விசாரணையின்போது, பேரறிவாளன் கடந்த 30 ஆண்டுகள் சிறையில் உள்ளார். நீங்கள் அவர் விடயத்தில் இன்னமும் தாமதம் செய்வதை எப்படி ஏற்பது?, என உச்சநீதிமன்றம் மத்திய அரசிடம் கேள்வி தொடுத்திருந்தது. மத்திய அரசுத் தரப்பில், அவரது விடுதலைக்கு கடுமையாக எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், சிறை விடுப்பில் இருந்தபோது பேரறிவாளன் மீது எந்தக் குற்றச்சாட்டும் பதிவாகவில்லை, எனக் குறிப்பிட்டுள்ள உச்சநீதிமன்ற நீதிபதிகள் அவருக்குப் பிணையினை வழங்கியுள்ளனர்.

இந்தப் பிணையானது, எவ்வளவு காலப்பகுதிக்கானது என்பது குறிப்பிடப்படவில்லை. இருப்பினும் பேரறிவாளன் உட்பட எழுவரின் விடுதலை குறித்து குடியரசுத் தலைவரின் ஆலோசனையைப் பெறும் வரை இந்தப் பிணையானது நீடிக்கப்படலாம் எனக் கருதப்படுகிறது.

பேரறிவாளனுக்குப் பிணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, ராஜீவ் கொலை வழக்கில் சிறையிலுள்ள ஏனைய ஆறு பேரும் உச்சநீதிமன்றத்தில் தங்களுக்கும் பிணை கோரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பேரறிவாளன் நிரந்தரமாக விடுதலையாவார் என்ற நம்பிக்கையுள்ளதாக தாயார் அற்புதம்மாள் கருத்து

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் 30 ஆண்டுகளாக சிறையில் இருக்கும் பேரறிவாளன் தனக்கு பிணை வழங்கக் கோரிய வழக்கில் இந்திய உச்ச நீதி மன்றம் அவருக்குப் பிணை வழங்கியுள்ளது.

மகனின் விடுதலைக்காக தொடர்ந்து போராடிவரும் பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் இந்த அறிவிப்புக் குறித்த தனது எண்ணங்களை ஊடகவியலாளர்களிடம் பகிர்ந்துகொண்டுள்ளார்.

மிக நீண்ட சட்டப் போராட்டத்தை தொடர்ந்து உச்ச நீதிமன்றம் பிணை வழங்கி இருப்பது மகிழ்ச்சியை தருகிறது. 32 வருடமாக சிறையில் இருக்கும் அவனது பாதி வாழ்க்கை அங்கேயே முடிந்துவிட்டது.

சிறை வாசத்திலும் நல்ல ஒழுக்கத்தையும், படிப்பையும் பெற்றிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

எனக்கு வாழ்க்கையில் எதுவும் தேவையில்லை. எனது மகன் விடுதலையாக வேண்டும். பேரறிவாளனுக்கு ஏற்கனவே சிறை விடுப்பு வழங்கப்பட்டிருந்தாலும் சுதந்திரமாக வெளியே



செல்ல முடியாது. இந்தப் பிரச்சினையையும் அவனது உடல்நிலையையும் கருத்தில்கொண்டு பிணை வழங்கப்பட்டுள்ளது.

நியாயம் என்றாவது வென்றே தீரும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. விரைவிலேயே நிரந்தரமாக விடுதலை செய்யப்படுவார் என்ற நம்பிக்கையும் இதன் மூலம் ஏற்பட்டுள்ளது, என்று அவர் தெரிவித்திருக்கிறார்.




## கொவேக்ஸ் தடுப்பூசியைப் பயன்படுத்த மருந்து தரக்கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி

கொவேக்ஸ் கொரோனா தடுப்பூசியை 12 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் பெரியவர்கள் அவசர கால பயன்பாட்டுக்கு பயன்படுத்த இந்திய மருந்து தரக்கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி அளித்துள்ளது.

இதுகுறித்து இந்தியாவின் சீரம் இன்ஸ்டியூட் நிறுவனத்தின் பிரதானி அடார் பூனாவாலா தகவல் வழங்கியுள்ளார்.

சீரம் நிறுவனத்தின் கோவோவாக்ஸ் தடுப்பூசியை பெரியவர்கள் மற்றும் 12 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளின் அவசரகால பயன்பாட்டுக்கு இந்திய மருந்து தரக்கட்டுப்பாட்டு அமைப்பினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

12 வயதுக்கும் கீழ் உள்ளவர்களுக்கான ஒப்புத
லையும் விரைவில் பெறுவோம்
உலகளாவிய சோதனைகளி
எமது நிறுவனத்தின் நோவ
வாக்ஸ் 90 சதவீதத்துக்கும் அ
கமான செயல்திறனை நிரூபி
துள்ளது, என்று அவ
குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவில் தற்போ
பெரியவர்களுக்கு கொவே
ஸின், கொவிஷீல்ட், ஸ்புட்னி
வி, மொடர்னா உள்ளிட்ட சி
கொரோனாத் தடுப்பூசிகளும்
15 - 18 வயதுக்குட்பட்ட சிறார்
ளுக்கு கொவேக்ஸின் தடுப்பூ
யும், கோர்பேவக்ஸ் தடுப்பூசியு
மட்டுமே செலுத்தப்பட்டு வ
கின்றன. இதிலும், 12 - 15 வய
லான சிறார்களுக்கு கோ
பேவக்ஸ் மட்டுமே கொடுக்க
பட்டது. தற்போது கோவே
வாக்ஸ் தடுப்பூசியும் அந்த
பட்டியலில் இணைந்துள்ளது.

## பஞ்சாபில் கணிப்புகளை மிஞ்சிய வெற்றி இமாலய சக்தியாக மாறிய ஆம் ஆத்மி கட்சி



இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு மாநிலத்தில் ஆதிக்கம் செலுத்திய மாநில கட்சி ஒன்று இன்னொரு மாநிலத்தில் வெற்றிக் கொடியை நாட்டி இருப்பது இதுவே முதல் முறையாகும். இந்த வரலாற்றுச் சாதனையை அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி நிகழ்த்திக் காட்டி இருக்கிறது.

டெல்லியில் அரசு அதிகாரியாக உயர் பதவியில் இருந்த கெஜ்ரிவால், ஊழல் எதிர்ப்பு போராளியான அன்னா ஹசாரேவுடன் இணைந்து ஊழலுக்கு எதிராகவே முதலில் களம் கண்டார். பின்னர் 'ஆம் ஆத்மி கட்சி'யை தொடங்கி தலைநகர் டெல்லியில் அதிரடியாக காங்கிரஸை வீழ்த்தி ஆட்சியில் அமர்ந்தார்.

இதனைத் தொடர்ந்து கெஜ்ரிவாலின் பார்வை பஞ்சாப் மாநிலத்தின் பக்கம் திரும்பியது. கடந்த 2017ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி 77 இடங்களை பிடித்து ஆட்சி அமைத்த போதிலும், ஆம் ஆத்மி கட்சி யாரும் எதிர்பாராத வகையில் 20 இடங்களில் வெற்றி பெற்றது.

அப்போதில் இருந்தே ஆம் ஆத்மி மீது பஞ்சாப்பில் எதிர்பார்ப்பு அதிகரிக்கத் தொடங்கியது. அந்த வகையில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி அங்கு அமோக வெற்றியை பெற்றுள்ளது.

பஞ்சாப்பில் மொத்தம் 117 தொகுதிகள் உள்ளன. இதில் ஆட்சி அமைப்பதற்கு தேவையான அளவு இடங்களை ஆம் ஆத்மி கட்சி பிடிக்கும் என்றே தேர்தலுக்கு முந்தைய கருத்துக்கணிப்புகளும், பிந்தைய கருத்துக் கணிப்புகளும் தெரிவித்து இருந்தன.

ஆனால் இந்த கணிப்புகளை மிஞ்சும் வகையில் ஆம் ஆத்மி கட்சி பஞ்சாப்பில் பெருவாரியாக வெற்றி பெற்றுள்ளது. ஆம் ஆத்மி கட்சியின் சின்னமான 'துடைப்பம்' டெல்லியில் மிகவும் பிரபலமான சின்னமாகும். அந்த சின்னத்திலேயே பஞ்சாப்பிலும் களம் இறங்கி அரவிந்த் கெஜ்ரிவால் வெற்றிக்கனியை ருசித்துள்ளார்.

பஞ்சாப்பில் காங்கிரஸ் பெற்றுள்ள இந்த தோல்வியின் மூலம் அந்தக் கட்சி ஆளும் மாநிலங்களின் எண்ணிக்கை இரண்டாகக் குறைந்துள்ளது. ராஜஸ்தான், சத்தீஸ்கரில் மட்டுமே அந்த கட்சி தற்போது ஆட்சிப்பொறுப்பில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டுச் சிறைகளிலுள்ள இந்திய மீனவர்களை மீட்கவேண்டுமென மக்கள் நீதி மய்யம் கோரிக்கை

வெளிநாடுகளில் சிறைப் பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை மீட்க வேண்டும் என மக்கள் நீதி மய்யம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தமான் பகுதியில் மீன்பிடித்த 5 குமரி மீனவர்கள் எல்லை தாண்டி வந்தனர் என இந்தோனேஷிய அரசால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதே காரணங்களுக்காக அரபிக்கட லில் மீன்பிடித்த 32 தமிழக மீனவர்களும், சீசெல்ஸ் அரசால் கைது செய்யப்பட்டுள் ளனர். ஏற்கனவே இலங்கைக் கடல் எல்லையில் இன்னல்களை சந்தித்து வரும் நம் மீனவர்கள் மத்தியில் இந்தச் செய்தி புதியதொரு இடியாக இறங்கி இருக்கிறது.

எந்த பிரச்சினைக்கும் ம
திய- மாநில அரசுகள் இதுவ
நிரந்தரத் தீர்வு காணாத நிலை
யில் இப்பொழுது இந்தோனே
ஷிய மற்றும் சீசெல்ஸ் அரசு
ளால் மீனவர்கள் கைது செ
யப்பட்டுள்ளமை, ஆழ்கட
மீன் பிடிப்பில் ஈடுபட்டுள்ள
மீனவர்களுக்கு மேலும் அச்
த்தை உண்டாக்குகிறது. மீன
குடும்பங்களின் கண்ணீரை
துடைத்து அவர்கள் அச்சத்தை
போக்கும் வண்ணம் அய
நாட்டு சிறையில் அடைபட்
இருக்கும் நம் மீனவர்களை
விடுவிக்க மத்திய, மாநில
அரசுகள் உடனடியாக நட
டிக்கை எடுக்க வேண்டும், என்று
மக்கள் நீதி மய்யம் கட்சியின்
மாநில செயலாளர் முர
அப்பாஸ் வெளியிட்டிருக்கு
அறிக்கையில் கோரப்பட்டு

# 51 வீதம் பெண் வாக்காளர்கள் இருந்தும் பெண்களைத் தெரிவு செய்யாதமை ஏன்?

## மகளிர் தினவிழாவில் அம்பாறை மேலதிக அரச அதிபர் ஜெகதீசன் கேள்வி







(காரைதீவு நிருபர் சகா)

நாட்டில் 51வீதம் பெண் வாக்காளர்கள் இருந்தும் பெண் வேட்பாளர்களைத் தமது பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யாதமை ஏன்? உள்ளூராட்சிமன்றங்களில் அங்கத்தினரான பெண் பிரதிநிதிகளில் 90வீதமானோர் பட்டியல் முறையிலேயே தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏன் தேர்தலில் அவர்கள் நேரடியாகத் தெரிவாகவில்லை? இது ஏன்? உரிமை, உரிமை என்று மகளிர் தினத்தில் மட்டும் குரலெழுப்புவதை விடுத்து 25வீத ஒதுக்கீட்டைத் தக்க வைத்து இருக்கின்ற உரிமைகளுடன் மேலும் உரிமைக்காகத் தொடர்ச்சியாகப் போராடவேண்டும்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கல்முனையில் இடம்பெற்ற மகளிர் தினவிழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மனித அபிவிருத்தித் தாபனத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட சகவாழ்வுக் குழுக்கள் இணைந்து நடத்திய மாபெரும் சர்வதேச மகளிர் தினவிழா நேற்றுமுன்தினம் கல்முனை கிறிஸ்ரா இல்லத்தில் மகளிர் அணித்தலைவி றிலீபா பேகம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

இன்று பெண்களுக்கு உரிய இடம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதனை முழுமையாக பயன்படுத்த அவர்கள் முன்வரவேண்டும். எந்தத் தொழிலும் பெண்களே அதிகம். பெண்கள் தானாக முன்வந்து சட்டம் தீட்டும் இடத்திலும் திட்டம் போடும் இடத்திலும் பிரதிநிதித்துவம் வகிக்காதவரை ஆணாதிக்கம் என்ற சொல்லைத் தவிர்க்கமுடியாது. - என்றார்.

மனித அபிவிருத்தி தாபனத்தின் பணிப்பாளர் கலாநிதி பி.பி.சிவப்பிரகாசம் உரையாற்றுகையில் -

உள்ளூராட்சி மன்றங்களுக்குச் செல்லும் பெண்பிரதிநிதிகள் பெண் பிரதிநிதியாகவே செல்லுங்கள். அதைவிடுத்து முஸ்லிம் பிரதிநிதி, தமிழ்ப் பிரதிநிதி, சிங்களப் பிரதிநிதி என்ற எண்ணத்தைக் கைவிடுங்கள். எந்த இனப் பெண்ணுக்குப் பிரச்சினை எழுந்தாலும் இன,மத பேதமின்றி அனைவரும் ஒருமித்து பெண் என்ற அடிப்படையில் குரல் எழுப்ப வேண்டும்.

பெண்ணுக்குப் பாதுகாப்பு இல்லை என்றால் அதற்கு காரணம் ஆண் என்ற கருத்துள்ளது. சரி என்போம். எனின் பெண்ணுக்கு உரிமை வேண்டும், சுதந்திரம் வேண்டும் என்று கூறிப் பெண்ணுக்கு மட்டும் சட்ட வரையறை, கட்டுப்பாடு விதிக்கப்படுவதைக் காண்கிறோம். மாறாக அது ஆண்களுக்கே விதிக்கப்பட வேண்டும்.-என்றார்.

பிரதமஅதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், சிறப்பு அதிதியாக மனித அபிவிருத்தித் தாபனத்தின் பணிப்பாளர் கலாநிதி பி.பி.சிவப்பிரகாசம் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள். கௌரவ அதிதிகளாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனைப்பிராந்திய இணைப்பாளர் எ.சி.எ.அசீஸ் ,காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன், மனித அபிவிருத்தித் தாபனத்தின் ஆலோசகரும் உதவிக்கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மகளிர் சிறப்பு அதிதிகளாக மனித அபிவிருத்தித்தாபன மகளிர் விவகார இணைப்பாளர் திருமதி லோகேஸ்வரி சிவப்பிரகாசம், தென்கிழக்கு பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அனுசியா சேனாதிராஜா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இலங்கையில் மனித உரிமைகள் மர் றும் சமுகசேவைகள் தொடர்பில் ஆற் வரும் அளப்பரிய சேவைக்காகவு மனித உரிமைத் துறையில் கலாநிதி பட்டம் பெற்றமைக்காகவும் நிகழ்வில் மனிதஅபிவிருத்தித்தாபனத்தின் பணி பாளர் கலாநிதி பி.பி.சிவப்பிரகாச 'உரிமைச்சுடர்' விசேட விருது வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். அவ தொடர்பான சேவைகளை ஆலோசக வி.ரி.சகாதேவராஜா விளக்கி உரையாற்றி யமையோடு கௌரவிப்பு நிகழ்வை நெறிப்படுத்தினார்.

சகவாழ்வுக்குழு உறுப்பினர்களின் சிறப்பான, வித்தியாசமான கலைநிகழ் சிகள் மேடையேறின. குறிப்பாக நிந்தவூர், சம்மாந்துறை உள்ளூராட்சி மன்ற பெண் பிரதிநிதிகள் பங்கேற் கருத்துக்களம் நிகழ்ச்சி, வில்லுப்பாட்டு ஜே.தக்சாளினி குழுவினரின் பரதநா டியம் என்பன சபையோரை வெகுவாகக் கவர்ந்தன.

தாபனத்தின் வடக்கு, கிழக்கு மாகாண இணைப்பாளர் பி.ஸ்ரீகாந்த், உதவி இணைப்பாளர் எம்.ஜ.றியால் ஆகியோ ரும் கலந்து சிறப்பித்தனர். இலங்கை வானொலி ஊடகவியலாளர் நயீப் நிகழ்ச்சிகளை தொகுத்தளித்தார்.

# பாலமுனையில் தனியாரின் காணியில் புத்தர் சிலையை வைப்பதற்கு முயற்சி!



அம்பாறைமாவட்டம்அட்டாளைச் சேனை பிரதேச சபைக்குட்பட்ட பாலமுனை, முள்ளிமலை பிரதேசத்தில் உள்ள தனியார் காணியில் புராதன சின்னங்கள் உள்ள நிலம் எனப் பரப்புரையை முன்வைத்து புத்தர் சிலையொன்றை நிறுவ பௌத்த பிக்குகளும், சிங்கள இளைஞர்கள் சிலரும் எடுத்த முயற்சியினால் நேற்று அந்தப் பிரதேசத்தில் சிறிய பதற்றம் நிலவியது.

கடந்த சில நாள்களாக அங்கு வருகைதந்த சிங்கள இளைஞர்கள் சிலர் சிலை நிறுவும் ஏற்பாடுகளைச் செய்து வந்தனர் எனவும் நேற்று காணி பூஜை செய்வதற்கான ஏற்பாடுகளை செய்தபோதே இந்த முரண் பாட்டு நிலை முற்றியதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

அந்த இடத்திற்கு நேரடியாக வருகைதந்த முன்னாள் கிழக்கு மாகாண சபை அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எல். தவம், அட்டாளைசேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ. அன்ஸில், அட்டாளைசேனை பிரதேச சபை தவிசாளர் ஏ. அமானுல்லா, அட்டாளைசேனை பிரதேச சபை உறுப்பினர்கள், கிழக்கின் கேடயம் அமைப்பினர், பிரதேச மக்கள் பலரும் வெளியிட்ட எதிர்ப்பை அடுத்து அக்கரைப்பற்று பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படையினரும் தலையிட்டனர். அரசாங்க அதிபர் ஊடாகப் பிரச்சினையைத் தீர்க்க முடிவு செய்யப்பட்டதுடன் அங்கிருந்து எல்லோரும் வெளியேற்றப் பட்டு பாதுகாப்பு படையினர் பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டுவருகின்றனர்.

# கல்முனையில் ஐம்பது பேர் மீது ஒரே நாளில் சட்ட நடவடிக்கை!

## போக்குவரத்து விதி மீறல்களுக்காக



கல்முனை பிராந்தியத்தில் நேற்றுக் காலை முதல் மதியம் வரை முன்னெடுக்கப்பட்ட திடீர் வீதிச் சோதனை நடவடிக்கையை அடுத்து 50 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கல்முனை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை நகரப்பகுதி, நற்பிட்டிமுனை பிரதான சந்தி, தாளவட்டுவான் சந்தி மற்றும் பாண்டிருப்பு போன்ற இடங்களில் இந்தச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.


சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம்செலுத்துவது, தலைக்கவசம் அணியாது செல்வது, ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணிப்பது, அதிவேகமாக செல்வது, குடிபோதையில் வாகனம் ஓட்டுவது தொடர்பிலேயே சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்தோடு, வீதி ஒழுங்குமுறை தொடர்பான ஆலோசனைகளும் பொலிஸாரால் வழங்கப்பட்டன.

கொரோனா அனர்த்தத்தை அடுத்துத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இச்சோதனை நடவடிக்கை இப்போது கல் முனை தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் ஆலோசனையின் படி, முக்கிய சந்திகள், பிரதான வீதிகளில் கல்முனை பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸாரால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு









# பெங்களூர் அணியின் தலைவர் யார்? 12ஆம் திகதி அறிவிப்பு வெளியாகும்

10 அணிகள் பங்கேற்கும் 15 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டித் தொடர் வருகிற 24 ஆம் திகதி தொடங்கி மே 29 வரை நடைபெற வுள்ளது.

இந்தத் தொடருக்கான போட்டி அட்டவணை இந்தவாரம் வெளியிடப்பட்டது. முதலாவது ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதவிருக்கின்றன.

இந்த சீசனில் புதியதாக களம் இறங்கும் லக்னோ அணிக்கு லோகேஷ் ராகுலும், அகமதாபாத் அணிக்கு ஹார்திக் பாண்ட்யாவும் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கு கடந்த சீசன்களில் விராட் கோலி தலைவராக செயல்பட்டு வந்தார். பின்னர் அவர் பெங்களூர் அணித் தலைவர் பொறுப்பில் இருந்து விலகு கிறேன் எனஅறிவித்தார். அதனையடுத்து பெங்க ளூர் அணியின் புதிய அணித்தலைவர் விபரம் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

பெங்களூர் அணியின் புதிய தலைவர் யார் என்பது வருகிற 12 ஆம் திகதி மாலை அறிவிக் கப்படுமெனவும், அப்போது அணியின் புதிய சீருடையும் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்னாபிரிக்க அணி யின் முன்னாள் தலைவரும், சென்னை அணி யின் முன்னாள் வீரருமான பப் டுபிளெசிசுக்கு அணித்தலைவராவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன எனக் கருதப்படுகிறது.

பெங்களூர் அணியில் இடம்பெற்றுள்ள ஆஸ்திரேலிய அணியின் மக்ஸ்வெல்லுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படலாமென முன்னதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் அணி நிர்வாகம், டுபிளெசிசை தேர்ந்தெடுத்துள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பெங்களூர் அணி தனது தொடக்க ஆட்டத்தில் 27 ஆம் திகதி பஞ்சாப் அணியுடன் மோத விருக்கிறது.

# அலெக்சாண்டர் ஸ்வெரேவுக்கு போட்டிகளில் பங்கேற்கத் தடை



ஜேர்மனி நாட்டு டென்னிஸ் வீரரான அலெக்சாண்டர் ஸ்வெ ரேவுக்கு 8 வார காலத் தடையும், அபராதமும் விதிக்கப்பட்டுள்ளன.

உலக டென்னிஸ் தரவரிசையில் மூன்றாவது இடம் வகிப்பவரும், ஒலிம்பிக் சம்பியனுமான அலெக்சாண்டர் ஸ்வெரேவ் கடந்த மாதம் மெக்ஷிக்கோவில் நடந்த அகபுல்கோ ஓபன் டென்னிஸ் தொடரில் பங்கேற்று விளையாடிய போது சர்ச்சையில் சிக்கினார்.

இரட்டையர் பிரிவில் பிரேஸிலின் மார்செலோ மெலோவுடன் இணைந்து ஆடிய அவர் முதலாவது சுற்றில் லொயிட் கிளாஸ்பூல் (இங்கிலாந்து)- ஹெலியாவாரா (பின்லாந்து) இணையிடம் போராடித் தோல்வியை தழுவினார்.

இந்த ஆட்டத்தின்போது சில புள்ளிகளை நடுவர் எதிர் ஜோடிக்கு வழங்கியபோது ஆட்சேபித்த அலெக்சாண்டர் ஸ்வெரேவ், இறுதி யில் நடுவரை அச்சுறுத்தும் விதமாக அவர் அமர்ந்திருந்த இருக்கை மீது நான்கு முறை டென்னிஸ் மட்டையால் ஆவேச மாக ஓங்கி அடித்தார். அவரது செயலால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அவர், அந்த தொடரின் ஒற்றையர் பிரிவில் இருந்தும் தகுதி நீக்கம் செய்யப்பட்டு நீக்கப்பட்டார்.

இந்தச் சம்வம் குறித்து விசாரணை நடத்திய டென்னிஸ் சம்மே ளனம், அதன் முடிவில் 24 வயதான அலெக்சாண்டர் ஸ்வெரேவுக்கு 8 வார காலத் தடையும், 25,000 டொலர்கள் அபராதமும் விதித்துள்ளது. அத்துடன் ஓராண்டு காலம் அவரது நடத்தை தீவிரமாக கண்காணிக்கப்படும் எனவும், இந்த காலக்கட்டத்தில் அவர் மீண்டும் ஏதாவது விதி மீறல்களைச் செய்தால் கடும் தண்டனைக்குள்ளாக நேரிடும் என்றும் டென்னிஸ் சம்மேளனத்தினால் எச்சரிக்கப்பட்டுள்ளது.



# பரா ஒலிம்பிக் போட்டித் தொடர் சீனா தொடர்ந்தும் முன்னிலை

சீனாவில் நடைபெற்றுவரும் பரா ஒலிம்பிக் போட்டித்தொடரில் சீனா தொடர்ந்தும் பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் நீடிக்கிறது. 10 தங்கப் பதக்கங்கள், 9 வெண்கலப் பதக்கங்கள், 12 வெள்ளிப் பதக்கங்களுடன் மொத்தமாக 31 பதக்கங்களைப் பெற்று சீனா முதலிடத்தில் உள்ளது.

7 தங்கம், 2 வெண்கலம், 7 வெள்ளி என மொத்தமாக 16 பதக்கங்களுடன் கனடா இரண்டாவது இடத்திலும், 6 தங்கம், 8 வெண்கலம், 5 வெள்ளி ஆகியவை அடங்கலாக 19 பதக்கங்களுடன் உக்ரைன் மூன்றாவது இடத்திலும், 4 தங்கம், தலா ஒரு வெள்ளி, வெண்கலப் பதக்கம் என மொத்தமாக 6 பதக்கங்களுடன் பிரான்ஸ் நான்காவது இடத்திலும் இருக்கின்றன.

3 தங்கப் பதக்கங்களையும் ஒரு வெண்கலப் பதக்கம், 2 வெள்ளிப் பதக்கங்களோடு மொத்தமாக 6 பதக்கங்களைப் பெற்றுள்ள ஜப்பான் ஐந்தாவது இடத்தையும், ஸ்லோவோக்கியா, அமெரிக்கா, ஜேர்மனி, ஒஸ்திரியா மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் முறையே ஆறு முதல் பத்து வரையான இடங்களையும் பிடித்துள்ளன.

தமது நாட்டில் யுத்தம் இடம்பெறும் வேளையிலும் உக்ரைன் நாட்டு வீர, வீராங்கனைகள் மனத்திடத்தோடு போட்டிகளில் பங்கேற்பது பாராட்டுகளைப் பெற்றுள்ளது.




# சிம்பாப்வே தேசிய கிரிக்கெட் அணிக்கு புதிய தலைமையும் பயிற்சியாளர்களும்

சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் மட்டுப்படுத் தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான தலைவராக அந்த அணியின் மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர் கிரைக் எர்வினும் டெஸ்ட் அணி யின் தலைவராக சீன் வில்லியம்சும் நியமிக்கப் பட்டுள்ளனர். அனைத்துவகையான போட்டிக ளுக்குமான உப தலைவராக ரெஜிஸ் செகப்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக லான்ஸ் குளுஸ்னர் மீண்டும் இணைக்கப்பட்டுள் ளார். இவர் ஏற்கனவே, கடந்த 2016-2018 ஆம் ஆண்டுகளில் சிம்பாப்வே அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக செயற்பட்டிருந்தார். பின்னர் அவர் ஆப்கானிஸ்தான் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக பொறுப்பேற்றிருந்தார்.

அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக இருந்த ஸ்டுவர்ட் மட்ஷிகெனேரி தற்போது, உதவிப் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

தலைமை பயிற்றுவிப்பாளராக லால்சந் ராஜ்புத் தொடர்ந்து பணியாற்றுவார் என சிம்பாப்வே கிரிக்கெட் நிர்வாகம் அறிவித்துள்ளது.

# அத்தியாவசியமற்ற பொருள்கள் இறக்குமதி செய்வதற்குத் தடை!

## வர்த்தமானி அறிவித்தல் வெளியானது

367 அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி நேற்று நள்ளிரவு முதல் அனுமதிப்பத்திரம் இன்றி அத்தியாவசியமற்ற பொருள்களை இறக்குமதி செய்வதற்குத் தடை விதித்து வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

உரிம முறையின் கீழ், ஒவ்வொரு இறக்குமதியாளரும் தங்கள் இறக்குமதிகள் தொடர்பாக நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுக்க வேண்டும்.

அனுமதிக்கு முன் அந்த நேரத்தில் கோரிக்கையின் முக்கியத்துவத்தை நிதி அமைச்சகம் பரிசீலிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் இன்றறக்ட் கழகத்தால் 'ஒருதுளி உயிர் தரும்' இரத்ததானம்

யாழ்ப்பாணம் இன்றறக்ட் கழகம் 'ஒருதுளி உயிர் தரும்' எனும் தொனிப்பொருளில் வருடாந்தம் நடத்திவரும் இரத்ததான முகாம் இந்தவருடம் நாளை (வெள்ளிக்கிழமை) காலை 8 மணிமுதல் நடைபெற உள்ளது.

இந்தக் குருதிக்கொடை நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் இன்றறக்ட் கழகத்தினர் அழைத்துள்ளனர்.

# தேர்தல் உறுதிமொழிக்கு அமைய நாடு முழுவதும் தேசிய பாடசாலை



நாடு முழுவதும் தேசிய பாடசாலைகளை நிறுவுதல் என்ற அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதி தற்போது நிறைவேறிவருவதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நேற்று (புதன்கிழமை) நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் தேசிய பாடசாலை ஒன்றை நிறுவுவதற்கு முன்னுரிமை அளிக்க ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் எனக் கூறினார்.

மாகாண சபைகளுக்கு உட்பட்ட பாடசாலைகளை மத்திய அரசால் கையகப்படுத்த முடியாது என்றும் இது தொடர்பாக மாகாண சபைகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகிறோம் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் விதிகள் அமுல்படுத்தப்படும் என அரசாங்கம் இந்தியாவுக்கு உறுதியளித்துள்ளது. எனவே மாகாண சபைகளின் கீழ் உள்ள பாடசாலைகளை கையகப்படுத்துவது சட்ட பூர்வமானதா என நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வி எழுப்பினார்.

முன்னாள் கல்வி அமைச்சர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார தனது ஆட்சிக் காலத்தில் இதே போன்று நூற்றுக்கணக்கான பாடசாலைகளை கையகப்படுத்தினார் என அமைச்சர் குணவர்தன கூறினார். வர்த்தமானி அறிவித்தல் மூலம் எந்த வொரு பாடசாலையும் கையகப்படுத்தப்பட வில்லை என கல்வி அமைச்சர் கூறியமையுடன், மாகாண சபைகளுடன் தேவையான கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகிறோம் எனவும் தெரிவித்தார்.



# எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்படமாட்டாது

## புதிய எரிசக்தி அமைச்சர் திட்டவட்டம்

உலக சந்தையில் எரி பொருள் விலை அதிகரித்துள்ள நிலையில் இலங்கையில் எரி பொருள் விலை அதிகரிக்கப்பட மாட்டாது என எரிசக்தி அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார். கொழும்பில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், எண்ணெய்க் கப்பலுக்கான கட்டணம் முன்னர் 3 கோடியே 20 லட்சம் டொலர்களாக மதிப்பிடப்பட்டது எனக் கூறினார்.

இருப்பினும் சிங்கப்பூர் நாணய விகிதங்களுடன் ஒப்பிடுகையில் இது 5 கோடியே 20 லட்சம் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக மேலும் தெரிவித்தார்.

இதன் காரணமாக ஒரு கலனுக்கு 81 ரூபா இழப்பு ஏற்படும் என எரிசக்தி அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

மின்சாரம் மற்றும் எரிபொருள் விநியோகம் எதிர்வரும் அடுத்த வாரத்துக்குள் மீளமைக்கப்படும் என எரிசக்தி அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

# எரிவாயு சிலிண்டர்கள் இறக்குமதி விநியோகம் ரிட் மனுவை விசாரணைக்கு ஏற்றது நீதிமன்று

பாதுகாப்பற்ற சமையல் எரிவாயு சிலிண்டர்களை இறக்குமதி செய்து, அவற்றை விநியோகித்தமையை மையப்படுத்தி உரிய விசாரணைகளுக்கு உத்தரவிடக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கடந்த 2021 டிசெம்பர் 8 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனுவை (ரிட்) விசாரணைக்கு ஏற்றுக்கொள்வதாக நீதிமன்றம் அறிவித்தது.

மேற்படி மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதா, இல்லையா என்பது தொடர்பான உத்தரவை வழங்குவதற்காக அம் மனுவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே மேன் முறையீட்டு நீதிமன்றின் நீதிபதிகளான கலாநிதி ருவன் பெர்னாண்டோ மற்றும் சம்பத் விஜயசிங்க ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் இந்தத் தீர்மானத்தை அறிவித்தது.

அத்துடன் பாதுகாப்பற்ற சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகித்தமை தொடர்பில் எதிர்வரும் ஜூன் மாதம் 06 ஆம் திகதி நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு லிற்றோ மற்றும் லாப்ஸ் எரிவாயு நிறுவனங்கள் அடங்கலாக 04 பிரதிவாதிகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் அறிவித்தலும் அனுப்பப்பட்டது.

மனுதாரர் மற்றும் சம்பவத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிபதிகள் இந்த அறிவித்தலைப் பிறப்பித்துள்ளனர்.

முன்னதாக பாதுகாப்பற்ற சமையல் எரிவாயு சிலிண்டர்களை இறக்குமதி செய்து, அவற்றை விநியோகித்தமையை மையப்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கடந்த ஜனவரி 8 ஆம் திகதி இந்த எழுத்தாணை மனு (ரிட்)தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

'விநிவித பெரமுன'வின் பொதுச்செயலரும் சமூக செயற்பாட்டாளருமான நாகானந்த கொடித் துவக்கால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி மனுவில் தற்போதும், பாவனையாளர்களிடம் உள்ள, அரைவாசி பயன்படுத்தப்பட்டுள்ள எரிவாயு சிலிண்டர்களை மீளப்பெற்று, அது தொடர்பில் குறிப்பிட்ட ஒரு தொகையை பாவனையாளர்களுக்கு பணமாக வழங்கப்படல் வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# டொலருக்கு வழங்கப்படுகின்ற மேலதிக கொடுப்பனவு நிறுத்தம்

## மத்திய வங்கி ஆளுநர் அறிவிப்பு

வெளிநாட்டு பணியாளர்கள் அனுப்பும் டொலர் ஒன்றுக்கு 8 ரூபா வீதம் மேலதிக கொடுப்பனவு வழங்காதிருக்க மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தீர்மானித்துள்ளார்.

அனுமதிப்பத்திரமுடைய அனைத்து வணிக வங்கிகள் மற்றும் விசேட வங்கிகளுக்கு அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ள மத்திய வங்கி ஆளுநர் இதனை அறிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார பிரச்சினைக்கு முகங்கொடுப்பதற்காக, மத்திய வங்கியால் டொல ருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி நெகிழ்வுத் தன்மைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

இதன்படி, டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி செவ்வாய்க்கிழமை 225 ரூபா 20 சதமாகவும், விற்பனை பெறுமதி 229 ரூபா 99 சதமாகவும் பதிவாகி இருந்தது.

இதற்கமைய, வெளிநாட்டுப் பணியாளர்களால் இலங்கைக்கு அனுப்பப்படும் டொலருக்காக வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்ட 8 ரூபா மேலதிகக் கொடுப்பனவுடன், அவர்களுக்கு டொலர் ஒன்றுக்காக 238 ரூபா அளவில் கிடைக்கும்.

எனவே, வெளிநாட்டு பணியாளர்கள் அனுப்பும் டொலர் ஒன்றுக்கு 8 ரூபா வீதம் மேலதிக கொடுப்பனவு வழங்காதிருக்க மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தீர்மானித்துள்ளார்.

# சிறுமியைக் கடத்திச் சென்று குடும்பம் நடத்திய இளைஞன் ஊர்காவற்துறை பொலிஸாரால் கைது

15 வயது சிறுமியை பெற்றோரின் பாதுகாப்பில் இருந்து கடத்திச் சென்று, குடும்பம் நடத்திய 18 வயது இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்துறை பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் 18 வயது இளைஞனும் 15 வயதான சிறுமியும் காதலித்து வந்துள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சிறுமி வீட்டில் இருந்து வெளியேறி காணாமல் போயுள்ளார்.

அது தொடர்பில் சிறுமியின் பெற்றோரால் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சிறுமி தான் காதலித்த இளைஞனுடன் வீடொன்றில் வாழ்வதை அறிந்து, அங்கு சென்று சிறுமியை மீட்டமையுடன், இளைஞனையும் கைது செய்துள்ளனர். மீட்கப்பட்ட சிறுமியை வைத்திய பரிசோதனைக்காக வைத்தியசாலையில் சேர்த்துள்ள பொலிஸார், இளைஞனை பொலிஸ்நிலையத்தில்தடுத்துவைத்துவிசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.03.2022இல் வெளியிடப்பெற்றது.